323663

AECTN11

Reg. No.

I Semester B.A./B.Sc./B.Sc. (FAD)/B.C.A./B.P.A./B.V.A./ B.S.W. Degree Examination,
DECEMBER/JANUARY 2025/26
TAMIL LANGUAGE
(SEP Scheme 2024 Onwards Freshers & Repeaters)

ACHARYA INSTITUTE OF GRADUATE STUDIES
LIBRARY
Date:
BANGALORE-107

Time : 3 Hours Maximum Marks : 80

SECTION - A

I. எவையேனும் மூன்றிற்கு விரிவான விடை தருக. (3×8=24)

1. கோப்பெருஞ்சோழன் நட்பின் சிறப்பைக் குறித்து பிசிராந்தையார் பாடிய பாடலின் பொருளை விளக்குக.
2. கோவலர் அடைந்த துன்பத்தினை நக்கீரர் வழி நின்று விளக்குக.
3. ஒழுக்கத்தின் சிறப்புகளாக பழமொழி பாடல் கூறும் கருத்துகளை விளக்கி வரைக.
4. அறநெறி பேணுதலை அறிவுறுத்தும் சிறுவெண்டரையார் பாடலினை விளக்கி வரைக.
5. இகழ்ந்தாரைத் தாமும் இகழ்தல் கூடாது என முன்றுரையறையனார் கூறும் கருத்துகளை விளக்கி வரைக.

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (4×5=20)

1. வளன் வலியுறுக்கும் உளம் இலாலிரோடு
இயைந்த கேண்மை இல்லாகியரோ
2. அம் கண் அகல் வயல் ஆர் பெயல் கலித்த
வண் தோட்டு நெல்லின் வரு கதிர் வணங்க
3. புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
புலம் மிக்கவர்க்கே புலனாம்
4. வல் மேல் மலையன் அல்லன் ஆயின்
நல் அமர் கடத்தல் எளிதுமன் நமக்கு
5. இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப
புடைவீழ் அம்துகில் இடவயின் தமிஇ வாள் தோள் கோத்த வன்கண் காளை
6. நிரந்து வழி வந்த நீசருள் எல்லாம்
பரந்து ஒருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்

|P.T.O

ACHARYA INSTITUTE OF GRADUATE STUDIES
LIBRARY
Date:
BANGALORE-107

SECTION - B

III. எவையேனும் நான்கிற்கு விடை தருக. (4×4=16)

1. சார்பெழுத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
2. மொழி முதல் எழுத்துகளைச் சான்றுடன் விளக்குக.
3. போலியை விளக்கி அதன் வகைகளைச் சான்றுடன் கூறுக.
4. வினா எழுத்தினை விளக்கி அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
5. குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
6. மெய்யெழுத்தின் வகைகளை விளக்கி வரைக.

SECTION - C

IV. 'கானல் நீர் கனவுகள்' எனும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து பின்வருவன- வற்றுள் எவையேனும் இரண்டிற்குத் திறனாய்வு வடிவில் விடை தருக. (2×10=20)

1. மகனை சார்ந்திருக்கும் வயது முதிர்ந்த தந்தையின் மனக்குமறல்கள்.
2. கானல்நீர் கனவுகள் எனும் சிறுகதையில் விஜயா வாழ்க்கையில் நடக்கும் மாற்றங்கள்.
3. அவரவர் தர்மம் எனும் சிறுகதையில் மூதாட்டியின் மனிதாபிமானம்.
4. இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள எனும் சிறுகதையில் நாராயணனின் சமூகப்பணி.